**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் &மேலாளர் மற்றும் ஆணையர் (பொ) திருமதி வே. விஜயாஸ்ரீ அவர்களால் 26.06.2019–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு சாதாரணக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : .06.2019 இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

(1) இராசிபுரம் நகராட்சியில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திரு ம. சலீம், வயது முதிர்வின் காரணமாக 30.06.2019 அன்று பணியிலிருந்து ஓய்வு பெறவுள்ளார். திரு ம. சலீம், அலுவலக உதவியாளருக்கு, சிறப்பு சேமநலநிதி நிர்வாகப் பங்குத் தொகை (மான்யத் தொகை) ரூ. 10000/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** ரூ. 10000/– சிறப்பு சேமநலநிதி மான்யமாக திரு ம. சலீம், அலுவலக உதவியாளருக்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

(1375/19/சி1)

**தீர்மானம் எண். 569**

அனுமதிக்கப்பட்டது

(2) இந்நகராட்சியில் 30.04.1991 முதல் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து 31.05.2019–இல் வயது முதிர்வின் காரணமாக பணி ஓய்வு பெற்ற திரு க. சுந்தரம் அவர்களுக்கு, சிறப்பு சேமநலநிதி நிர்வாகப் பங்குத் தொகை (மான்யத் தொகை) ரூ. 10000/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** ரூ. 10000/– சிறப்பு சேமநலநிதி மான்யமாக திரு க. சுந்தரம், இளநிலை உதவியாளர் (பணி ஓய்வு) அவர்களுக்கு நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(1307/19/சி1)

**தீர்மானம் எண். 570**

அனுமதிக்கப்பட்டது

(3) இந்நகராட்சிப் பகுதியில் வடகிழக்கு பருவமழை பொய்த்ததால் வரக்கூடிய 3 மூன்று மாதங்களுக்கு ஆழ்துளைக் கிணறு மற்றும் திறந்த வெளிக் கிணற்று குடிநீர் விநியோகம் வழங்குவது பற்றாக்குறையாக இருக்கும் என்பதால், தனியார் டேங்கர் லாரிகள் மூலம் பொது மக்களுக்கு குடிநீர் வழங்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க நாமக்கல், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, குடிநீர் பற்றாக்குறையை தவிர்க்கும் பொருட்டு இரண்டு தனியார் வாகனங்கள் மூலம் 3 மாதங்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யவும், இப்பணிக்கான செலவுத் தொகை வறட்சி நிவாரண நிதித் திட்டம் 2019–2020–இன் (SDRF 2019-20) கீழ் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் அனுமதி பெறுவதற்கு முன்மொழிவு அனுப்பவும், இச்செலவுத் தொகையினை வறட்சி நிவாரண நிதித் திட்ட மான்ய தொகையினை எதிர்நோக்கி நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அரசின் வறட்சி நிவாரணத் திட்ட மான்ய நிதியினை எதிர்நோக்கி நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(352/19/இ2)

**தீர்மானம் எண். 571**

அனுமதிக்கப்பட்டது

(4) இந்நகராட்சி வருவாய் நிதியின்கீழ் பல்வேறு பணிகளுக்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்து கொண்டு திரு எ. மதியழகன், ஒப்பந்ததாரர் அவர்கள் தான் செலுத்திய வைப்புத் தொகை மற்றும் பில் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட தொகைகளை திரும்ப வழங்க கோரியுள்ளார்.

எனவே, மேற்படி தொகைகள் 2015–16 முதல் உள்ளதால் (Lapsed Deposit) தொகை ரூ. 166708/–ஐ மனுதாரருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(560/19/டி3)

**தீர்மானம் எண். 572**

அனுமதிக்கப்பட்டது

(5) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்கள். 1, 2, 7, 8, 9, 10, 20, 22, 23, 24, 25, 26, 27 ஆகிய 13 வார்டுகளிலுள்ள 40 வாட்ஸ் குழல் விளக்குகள் 526 எண்ணிக்கை, 150 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகள் 67 எண்ணிக்கை மேலும் 1 x 36 CFL விளக்குகள் 484 எண்ணிக்கை, உயர் கோபுர விளக்குகள் 7 எண்ணிக்கை மொத்தம் 1084 தெரு விளக்குகளை இயக்கம் & பராமரிப்பு செய்யும் பணிக்கு பணியாணை வழங்கப்படும் நாள் முதல் ஒரு ஆண்டிற்கு இயக்கம் & பராமரிப்பு செய்ய தனியார் வசம் ஒப்பந்தப்புள்ளி மூலம் ஒப்படைக்க ஏற்படும் உத்தேச செலவினம் ரூ. 990000/–ற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(1207/19/இ1)

**தீர்மானம் எண். 573**

அனுமதிக்கப்பட்டது

(6) இந்நகராட்சி பொதுப்பிரிவில் அலுவலக உபயோகத்திற்கு பயன்படுத்தப்பட்டு வரும் Sharp Xerox Machine Tonner Gatdrige வாங்கியதற்கான தொகை `. 29000/– பட்டியல் வரப்பெற்றுள்ளது. அதன் விவரம் பின் வருமாறு.

Spyder Technology - Sharp Xerox machine Toner cartridge `. 29000/-

**அலுவலகக் குறிப்பு :** **1)** மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(அ2/637/18)

**தீர்மானம் எண். 574**

அனுமதிக்கப்பட்டது

ஒம் /– வே. விஜயாஸ்ரீ
தனி அலுவலர்

/ உண்மை நகல் /

ஆணையாளர்(பொ)
இராசிபுரம் நகராட்சி.